IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.105/2021

Deposition of Witness for P.W.17

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.செந்தில் குமார் |
| FATHER NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | காவல் ஆய்வாளர், வேலூர் மதுவிலக்கு அமல் பிரிவு வேலூர் |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 08.01.2026.

எதிரிகள் ஆஜர். 2ஆம் எதிரி ஆஜர் இல்லை மனு ஏற்பு வழக்கறிஞர் ஆஜர்.

குறுக்கு விசாரணை- (மனுவின் பேரில்)

இறந்த நபர் 04.01.2021 அன்று மாலை 05.00 மணிக்கு கொலை செய்யப்பட்டுள்ளார். இவ்வழக்கின் குற்ற எண் 26/2021. இவ்வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அ.சா.4 எனது விசாரணையில் 11.01.2021 அன்று காலை புது பஸ்டான்ட் நிலையம் அருகில் உள்ள முத்து பண்டபம் பின் புறம் என்னுடைய அப்பா ஓட்டி சென்ற ஸ்கூட்டி பெப் வண்டி கிடைத்தது என சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. இறந்த வேலுவின் மனைவி ஈஸ்வரி 10.01.2021 அன்று எழுத்து மூலமான புகாரில் 04.01.2021 அன்று இரவு 09.00 மணிக்கு என்னுடைய வீட்டில் இருந்து அவருடைய கணவர் ஸ்கூட்டி பெப் இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு எங்கு செல்லுக்கிறேன் என்று சொல்லாமல் சென்றுவிட்டார் என பகார் கொடுத்துள்ளார் என்றால் சரி. அந்த புகாரின் குற்ற எண் 23/2021 தேதி 10.01.2021 man missing என புகார் பதிவு

செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி புகாரை மேல் நடவடிக்கை இல்லை என முடிக்கப்பட்டது என்றால் வழக்கு கோப்பை பார்த்தால் தான் தெரியும். இந்த வழக்கில் தற்போது man missing வழக்கை குறிப்பிடவில்லை என்றால் சரி. man missing வழக்கில் உள்ள வேலுவும் இந்த வழக்கில் கொலையுண்டு இறந்து போன வேலும் ஒரே நபர் என்றால் சரி. இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்பட்ட சிலம்பரசன் பிரகாஷ்ராஜ் என்பவர்கள் இறந்த போன வேலுவின் மகன்கள். முனிசாமி இறந்தபோன வேலுவின் அண்ணன். ஜான்சிராணி இறந்த வேலுவின் மகள், தேவகுமார் வேலுவின் மருமகன் என்றால் சரி. தீனன் இறந்த போன வேலுவின் மாமா என்றால் சரி. பட்டியல் சாட்சி வேலு இறந்தபோன வேலுவின் மைத்துனர். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் சாட்சி ராஜாசேகர் இறந்த வேலுவின் தங்கை மகன் மற்றும் பட்டியல் சாட்சியின் 14வின் மகன் என்றால் சரி. எதிரி பரசுராமனை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்ய வில்லை என்றும் எந்த வழக்கு சொத்தையும் கைப்பற்றவில்லை என்றும் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றும் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளை பிரேத விசாரணை செய்த மருத்துவர்களிடம் காண்பித்து கருத்துரை பெறவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 08.01.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.01.08 10:34:22 +0600

Additional District Judge(FTC),
Vellore